DINAKARAN

2 FEB 2022

PAGE 11

# கல்வி அமைச்சருடன் துணைவேந்தர் ஆலோசனை



புதுச்சேரி கூட்டுறவு கல்வியியல் கல்லூரியில் உள்ள பாடத்திட்டங்களை புதுவை பல்கலைக்கழகத்தில் மீண்டும் தொடர்வது சம்பந்தமாக கல்வித்துறை அமைச்சர் நமச்சிவாயத்தை பல்கலை துணைவேந்தர் குர்மீத் சிங் சந்தித்து பேசினார்.

DINAMALAR

2 FEB 2022

PAGE 11

# கல்வியியல் கல்லூரிக்கு அங்கீகாரம் அமைச்சரிடம் துணைவேந்தர் உறுதி

**புதுச்சேரி, பிப். 2–**

புதுச்சேரி கூட்டுறவு கல்வியியல் கல்லூரிக்கு இந்தாண்டிற்கான அங்கீகாரம் வழங்கப்படும் என பல்கலைக்கழக துணைவேந்தர் உறுதி அளித்துள்ளார்.

புதுச்சேரி கூட்டுறவு கல்வியியல் கல்லூரி கடந்த 17 ஆண்டுகளாக இயங்கி வருகிறது. கல்லூரிக்கு தேவையான 2500 சதுரடி இடத்தில் 1500 சதுரடி கட்டட வசதி இருந்தால்தான் தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தின் அங்கீகாரம் கிடைக்கும்.

ஆனால் 800 சதுரடி இடத்தில் கல்லூரி இயங்கி வருவதால், கடந்தாண்டு கல்லூரியின் அங்கீகாரம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

இந்தாண்டு கல்லூரியை வேறு இடத்திற்கு மாற்ற அரசு அறிவித்தது. இடப்பற்றாக்குறை காரணமாக 100 பேருக்கு அனுமதியிருந்தும் 50 பேர் மட்டுமே சேர்க்கப்பட்டனர்.

கல்லூரி பழைய கட்டடத்திலேயே இயங்கி வருவதால் இந்தாண்டிற்கான அங்கீகாரம் வழங்கப்படவில்லை. இதனால் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கல்லூரிக்கான இடத்தை மாற்றி அங்கீகாரம் பெற்றுத் தரவேண்டும் என கல்வி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.

அமைச்சர் நமச்சிவாயம் நேற்று புதுச்சேரி பல்கலைக் கழக துணைவேந்தர் குர்மீத்சிங்கை நேரில் சந்தித்து, கல்வியில் கல்லூரி அங்கீகாரம் குறித்து பேசினார்.

கல்லூரியை வேறு இடத்திற்கு மாற்றவேண்டும். தேசிய ஆசிரியர் கல்விக்குழும விதிமுறைகளை பின்பற்றவேண்டும் என்ற நிபந்தனைகளுடன் இந்தாண்டு கல்லூரிக்கு அங்கீகாரம் வழங்கப்படும் என துணைவேந்தர் உறுதி அளித்தார்.

கூட்டுறவு கல்வியியல் கல்லூரியை லாஸ்பேட்டை அரசு குயிருப்பு சமுதாயக் கூடத்திற்கு மாற்ற அரசு உத்தரவிட்டுள்ளது. பொதுப்பணித் துறையின் அனுமதி கிடைத்தவுடன் கல்லூரி புதிய இடத்திற்கு மாற்றப்பட உள்ளது.



■ புதுச்சேரி கூட்டுறவு கல்வியியல் கல்லூரி அங்கீகாரம் தொடர்பாக அமைச்சர் நமச்சிவாயம், புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங்கை சந்தித்து பேசினார்.